**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தஞ்சாவூர்.**

**முன்னிலை: செல்வி. S. T. கனிமொழி, L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.I, தஞ்சாவூர்.**

2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 11-ம் நாள் வியாழன் கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் வைகாசித் திங்கள் 28 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.05/2018**

**CNR NO.TNTJ05-000014-2018**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,

நகர தெற்கு காவல்நிலையம், தஞ்சாவூர்.

குற்ற எண்.126/2017. .....குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1) அருண்பிரபு, வயது 42/2026, த/பெ. பாலு பால்ராஜ்,

எண்.4 சித்திரை வீதி, பெரியார் நினைவு சமத்துவபுரம்,

ஆதனூர் மண்டபம், நீடாமங்கலம், திருவாரூர்.

2) சுரேஷ், வயது 36/2026, த/பெ. சோனையன் நாடார்,

எண்.23 செக்கடி தெரு, புதுதோப்பு குறுக்கு தெரு, ஆரப்பாளையம், மதுரை.

(2 வது எதிரி கடந்த 18.03.2026 அன்று சிசி எண்.187/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார்) ....எதிரிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 02.01.2018 அன்று சி.சி.எண்.05/2018 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 10.06.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டதில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.P. வீரசேகர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....,

S T KANIMOZHI

Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:24:07 +0000

**தீர்ப்புரை**

I) **குற்ற அறிக்கையின் சுருக்கம்-**

கடந்த 22.04.2017 ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் தஞ்சாவூர் அருளானந்தம்மாள் நகர் 6 வது குறுக்கு தெருவில் உள்ள வீட்டு எண்.82 ஐ வாதி பூட்டிவிட்டு திருவாரூருக்கு சென்றுள்ளதாகவும், 22.04.2017 ம் தேதி 16.00 மணிக்கு எதிரிகள் இருவரும் வாதி வீட்டின் முன் கதவை உடைத்து உள்ளே சென்று வீட்டின் மேல்மாடியில் இருந்த ரூமிற்கு சென்று ரூமில் இருந்த பெட்டகத்தை சாவியை போட்டு திறந்து பெட்டகத்தின் உள்கதவை உடைத்தும் அதிலிருந்த சுமார் ரூ.5,40,000/- மதிப்புள்ள தங்க நகைகளை துர்லாபம் கருதியும் பகல் கன்னகளவு செய்து குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் நகர தெற்கு காவல்நிலைய காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது இதச பிரிவுகள். 454, 380 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

II) இந்நிலையில் இவ்வழக்கின் விசாரணையின் போது 2 வது எதிரி கடந்த 18.03.2026 அன்று சிசி எண்.187/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது இவ்வழக்கின் 1 வது எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் போதிய அவகாசம் கொடுத்து குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் குற்றம் பற்றி விளக்கிக்கூறி வினவப்பட்ட போது அவர் குற்றத்தை மறுத்துள்ளார். ஆவணங்களின் அடிப்படையில் கு.வி.மு.ச. பிரிவு 240(i)ன் கீழ் குற்றம்சாட்டப்பட்ட 1 வது எதிரி மீது இதச பிரிவுகள். 454, 380 ன் கீழான குற்றச்சாட்டு வனையப்பட்டு, குற்றச்சாட்டை விளக்கிக் கூறி வினவிய போது

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:24:15 +0000

குற்றம்சாட்டப்பட்டவர் தான் குற்றவாளி இல்லை என்றார். எனவே அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டது.

III) இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

IV) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1வது எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து 1வது எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(பி)ன் கீழ் வினவியபோது 1வது எதிரி அதனை மறுத்து கூறி 1வது எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

V) அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் 1வது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யப்பட்டது என்றும், அரசு தரப்பு சாட்சிகள் அதற்கு ஆதரவாக உள்ளது என்றும், எனவே 1வது எதிரிக்கு உரிய தண்டணை வழங்க வேண்டுமென வாதிட்டார். மாறாக, 1வது எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கின் புகார்தாரர் இறந்துவிட்ட நிலையிலும், அ.சா.1 தனது முதல் விசாரணையிலேயே 1வது எதிரிக்கு எதிராக எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில், சந்தேகத்தின் பலனை 1வது எதிரிக்கு அளித்து 1வது எதிரியை இந்த குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார் .

VI) **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் 1வது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள்.454, 380 ன் படியான குற்றச்சாட்டு**

S T KANIMOZHI

Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:24:21 +0000

**தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

VII) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

VIII) இவ்வழக்கில் எதிரிகள் 22.04.2017 ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் வாதி தனது வீட்டை பூட்டிவிட்டு திருவாரூருக்கு சென்றிருந்த நிலையில், 22.04.2017 ம் தேதி 16.00 மணிக்கு எதிரிகள் இருவரும் வாதி வீட்டின் முன் கதவை உடைத்து உள்ளே சென்று வீட்டின் மேல்மாடியில் இருந்த ரூமிற்கு சென்று ரூமில் இருந்த பெட்டகத்தை சாவியை போட்டு திறந்து பெட்டகத்தின் உள்கதவை உடைத்தும் அதிலிருந்த சுமார் ரூ.5,40,000/- மதிப்புள்ள தங்க நகைகளை திருடிச்சென்றுள்ளாரா? என்பதை ஆராய்கையில்,

1. அரசு தரப்பில் புகார்தாரர்/பசா.1 இறந்துவிட்டதாக இறப்புச்சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே புகார்தாரரின் மனைவியின் தாயார் பசா.2 பக்ருன்னிசா அசா.1 தனது முதல் விசாரணையில், "கடந்த 20.04.2017 ம் தேதி சென்னை சென்றிருந்ததாகவும், தன் மகள் கூத்தாநல்லூர் சென்றிருந்ததாகவும், தன் மகனும், மருமகனும் 22.04.2017 ம் தேதி வியாபாரம் சம்மந்தமாக திருவாரூர் சென்றிருந்ததாகவும், அன்றையதினம் இரவு சுமார் 8.45 மணியளவில் அவர்கள் இருவரும் வீடு திரும்பிய போது வீட்டின் கேட் திறந்திருந்ததாகவும், மெயின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததாகவும், பின் கதவு திறந்திருந்ததாகவும், பின்பு தனக்கு போன் மூலம் உடனடியாக தகவல் சொன்னதாகவும், தான் 23.04.2017 ம் தேதி காலை சென்னையிலிருந்து வந்ததாகவும், தனது அறைக்கு சென்று பார்த்தபோது தனது

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:24:27 +0000

பீரோவை உடைத்து, நகை பெட்டியை எடுத்திருந்ததாகவும், சுமார் 50-60 பவுன் நகைகள் காணாமல் போயிருந்ததாகவும், ஆரம் -15 பவுன், நெக்ல்ஸ் - 10 பவுன், தொங்கல் ( 3 ஜோடி) -3 பவுன், 3-4 மோதிரம்- 3-4 பவுன் இருக்கும், காப்பு - 5 பவுன், கல் ஜிமிக்கி -2 பவுன், ஜிமிக்கி -2 பவுன், ஒத்த செயின் -10 பவுன், அதன் டாலர் - 3 பவுன், வெள்ளி நகைகள் போன்றவை காணாமல் போயிருந்ததாகவும், பின்பு தான் இது சம்மந்தமாக தெற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் தனது மருமகன் கொடுத்தது என்றும், அதிலுள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், போலீசார் தன்னை 16.05.2017 ல் விசாரித்ததாகவும், தன்னை அப்போது நகைகளை அடையாளம் காட்ட சொன்னதாகவும், தான் தனது நகைகளை அடையாளம் காட்டியதாகவும், பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து தனது நகைகளை பெற்றுக்கொண்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள நகைகள் புகைப்படம் (எண்ணிக்கை -6) தன்னுடையது தான் என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.1ன் சாட்சியத்திலிருந்து கடந்த 23.04.2017 அன்று பசா.1, 4 போன் மூலமாக தகவல் சொன்னதன் பேரில், அசா.1ன் வீட்டின் கதவு உடைக்கப்பட்டு வீட்டின் பீரோவிலிருந்த 50- 60 பவுன் நகைகள் திருடு போயுள்ளதும், பின்பு போலீசார் போலீசார் நகைகளை அடையாளம் காட்டியபிறகு நீதிமன்றத்திலிருந்து பெற்றுச்சென்றுள்ளார் எனவும் அறியமுடிகிறது.

2. மேலும் அசா.1ன் குறுக்கு விசாரணையில் "புகாரை தான் கைபட எழுதி கொடுத்ததாகவும், தனது பெயரில் தான் புகார் எழுதி கொடுத்ததாகவும், நகைகள் காணாமல் போன அன்றே புகார் கொடுக்கவில்லை என்றும், மறுநாள் தான் புகார்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:24:32 +0000

கொடுத்ததாகவும், எதிரிகளை காவல்நிலையத்தில் போலீசார் தான் அடையாளம் காட்டியதாகவும், காணாமல் போன தனது நகைகள் கிடைக்காததால் தனது நகைகளை கொடுத்து தான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொண்டதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.1ன் சாட்சியத்திலிருந்து சம்பவம் நடந்து மறுநாள் புகார் கொடுத்துள்ளதாக கூறியுள்ள நிலையில், புகாரானது 23.04.2017 அன்று 17.00 மணிக்கு பசா.1 நியாஸ் அகமத் என்பவரால் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் அசா.1 தனது முதல் விசாரணையில் புகாரானது தனது மருமகனால் கொடுக்கப்பட்டது என கூறியுள்ள நிலையில், குறுக்கு விசாரணையில் அசா.1 புகாரை தனது கைப்பட எழுதிக்கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும் போலீசார் அடையாளம் காட்டிய பிறகே எதிரிகளைப் பற்றிய விவரம் தெரியவந்துள்ளதாகவும், அசா.1 தனது நகைகளை கொடுத்து நீதிமன்றத்திலிருந்து பெற்றுச்சென்றுள்ளதாக கூறியுள்ளது, உண்மையில் வழக்கின் நகைகள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டனவா அல்லது வழக்கிற்காக அசா.1னிடமிருந்து பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டனவா என்பது சந்தேகிக்கும் வகையில் உள்ளது. இந்நிலையில் புகாரானது எப்போது கொடுக்கப்பட்டது, யாரால் கொடுக்கப்பட்டது என முரண்பட்டு கூறியுள்ளது வழக்கின் மூலஆதாரமான புகாரே அசா.1ன் சாட்சியத்திற்கு மாறுபட்டுள்ளது என அறியமுடிகிறது.

3. அடுத்தபடியாக அசா.2 சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அசா.2 தனது முதல் விசாரணையில் "கடந்த 20.04.2017 ம் தேதி அசா.1 சென்னைக்கு சென்றிருந்ததாகவும், தான் தனது சொந்த வேலையாக

S T KANIMOZHI

Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:24:38 +0000

சொந்த ஊரான கூத்தாநல்லூருக்கு சென்றிருந்ததாகவும், தனது கணவரும், தம்பியும் வீட்டிலிருந்ததாகவும், 22.04.2017 ல் வியாபாரம் சம்மந்தமாக வெளியூர் சென்றிருந்ததாகவும், பின்பு அவர்கள் கூத்தாநல்லூரிலிருந்து தஞ்சாவூருக்கு அழைத்து வந்ததாகவும், அன்றையதினம் இரவு 7.30- 7.45 மணியளவில் சென்று பார்த்தபோது வீடு திறந்திருந்ததாகவும், வீட்டின் மேல்தளத்திலுள்ள தனது அம்மாவின் அறைக்கு சென்று பார்த்தபோது நகைகள் காணாமல் போயிருந்ததாகவும், போலீசாருக்கு உடனடியாக தகவல் சொன்னதாகவும், பின்பு தனது அம்மாவிற்கு போன் மூலமாக தகவல் சொன்னதாகவும், அவர் உடனடியாக தஞ்சாவூர் வந்ததாகவும், சுமார் 60 பவுன் நகைகள் காணாமல் போனதாக தனது அம்மா சொன்னதாகவும், அவர் வந்தவுடன் தெற்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், 16.05.2017 ம் தேதி நகைகள் கிடைத்துவிட்டதாக சொன்னதால் காவல்நிலையம் சென்றதாகவும், 30 பவுன் நகைகள் பெற்று கொண்டதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

4. மேலும் அசா.2 ன் குறுக்கு விசாரணையில் "தனது தாயார் அசா.1 தான் புகார் கொடுத்ததாகவும், அவர் பெயரில் தான் புகார் கொடுத்ததாகவும், சம்பவம் நடந்த அன்றே தனது கணவர் பசா.1 காவல்நிலையம் சென்று தகவல் கொடுத்ததாகவும், சம்பவம் நடந்தது குறித்து தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், தனது நகைகளை கொடுத்து தான் நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்டதாகவும், காணாமல் போன நகைகள் கிடைக்கவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.1 ன் சாட்சியத்திலிருந்து சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுக்கப்பட்டுள்ளதும்,

S T KANIMOZHI
Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:24:44 +0000

புகாரானது அசா.1 ஆல் கொடுக்கப்பட்டுள்ளதும், பசா.1 ஆல் காவல்நிலையத்தில் தகவல் மட்டும் கொடுக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது. இந்நிலையில் அசா.1 ன் சாட்சியத்திற்கு வேறுபட்டு அசா.2 சாட்சியமளித்துள்ளார் எனத்தெரிகிறது. மேலும் சம்பவம் குறித்து அசா.2 க்கு நேரடியாக தெரியாது என்பதும், அசா.2 தனது நகைகளை கொடுத்து நீதிமன்றத்திலிருந்து பெற்றுச்சென்றுள்ளதாக கூறியுள்ளதும், உண்மையில் வழக்கின் நகைகள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டனவா அல்லது வழக்கிற்காக அசா.2 னிடமிருந்து பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டனவா என்பது சந்தேக்கும் வகையில் உள்ளது. இந்நிலையில் புகார் மற்றும் வழக்கின் தடயப்பொருட்கள் அசா.1, 2 ன் சாட்சியத்திற்கு முரண்பட்டுள்ளது எனத்தெரிகிறது.

5. மேலும் அசா.3 ஆக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திருமதி. சந்திரா காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் "கடந்த 23.04.2017 ம் தேதி உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்தபோது அருளானந்த நகர் 6 வது குறுக்கு தெருவைச் சேர்ந்த நியாஷ் அகமது என்பவர் நிலையம் வந்து கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று மாலை 17.00 மணிக்கு நிலைய குற்ற எண்.126/2017 சட்டபிரிவுகள்.454, 380 இதசவின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் மேற்படி வழக்கினை காவல் ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே மாலை 18.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பட்டியல் சாட்சிககளை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.06.11 12:24:50 +0000

செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கினை பொறுப்பிலிருந்த தான் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.05.2017 ம் தேதி பகல் 12.00 மணிக்கு போலீஸ் பார்டி சகிதம் தஞ்சாவூர் டேனியல் தாமஸ் நகர், குட்சர் ரோட்டில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அவ்வழியே வந்த பதிவு எண் இல்லாத வெள்ளைநிற சிப்ட் டிசயர் காரை நிறுத்தி சோதனை செய்தததில் முனனுக்கு பின் முரணாக பதிலளித்தால் மீண்டும் விசாரிக்க அவ்விருவரும், கட்டைபிரபு (எ) அருண்பிரபு என்றும், மற்றொருவர் சுரேஷ் என்றும் கூறியதாகவும், மேற்கூறிய வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் என விசாரணையில் தெரியவந்ததால் மேற்படி இருவரையும் குற்ற காரணம் கூறி நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றியும் கைது செய்து, சாட்சிகள் முன்னிலையில் எதிரிகள் இருவரும் எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுதலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேலும் அசா.3 தனது சாட்சியத்தில், எதிரி எடுத்து ஆஜர் செய்து வழக்கின் தடயப்பொருளான 54 பவுன் எடையுள்ள தங்க நகைகளான 15 பவுன் எடையுள்ள நெக்லஸ்-1, 18 பவுன் எடையுள்ள ஆரம் -1, தோடு -1 ஜோடி, மோதிரம் -1, கைசெயின் -1, 8 பவுன் எடையுள்ள தங்க காப்பு, 2 பவுன் எடையுள்ள தங்க மோதிரம் -2, 3 பவுன் எடையுள்ள தங்க ஜிமிக்கி 1 ஜோடி, 3 பவுன் எடையுள்ள கல் ஜிமிக்கி -1 ஜோடி, 5 பவுன் எடையுள்ள டாலருடன் கூடிய தங்க செயின் 14.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி, எதிரி மற்றும் தடயத்துடன்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:24:56 +0000

நிலையம் திரேக பரிசோதனை தக்க வழிகாட்டுதலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், வழக்கின் தடயப்பொருளை படிவம் 91 சிபி எண்.69/2017 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், பின்னர் வழக்கின் பட்டியல் சாட்சிகளை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், காவல் ஆய்வாளர் திரு. ராஜேந்திரனின் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசரை சம்பவயிடத்தினோடு ஒத்து போனதால் தான் தனியாக வரைபடம் தயார் செய்யவில்லை என்றும், காவல் ஆய்வாளரிடம் சாட்சிகள் கூறிய சங்கதிகளையே தன்னிடம் கூறியதால் அவர்களை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், பின்னர் தனது புலன் விசாரணை முடித்து கொண்டு மேற்படி சட்டபிரிவின் கீழ் எதிரிகள் மீது கடந்த 23.06.2017 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

7. மேலும் அசா.3 ன் குறுக்கு விசாரணையில் "புகார்தாரர் நியாஷ் அகமது தான் புகார் கொடுத்ததாகவும், பட்டியல் சாட்சிகள் பத்ருநிஷா, சரிப் ஜாபர், சிரிஸ் பாத்திமா ஆகியோர் அசா.1 க்கு உறவினர்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் சம்மந்தப்பட்ட இவ்வழக்கில் உள்ள தடயபொருளை மட்டுமல்லாது வேறு வழக்கில் ஈடுப்பட்ட குற்ற சம்பவம் குறித்தும் கூறியதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.3 ன் சாட்சியத்திலிருந்து புகாரானது பசா.1 நியாஷ் அகமது என்பவரால் கொடுக்கப்பட்டுள்ளதும், புகார்தாரரின் உறவினர்களே இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளதும், தனிநபர் சாட்சிகள் யாரும் சேர்க்கப்படவில்லை என்பதும் தெளிவாக தெரிகிறது. மேலும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் இவ்வழக்கு

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:25:02 +0000

மட்டுமல்லாது வேறு வழக்குகளில் திருடிய பொருட்களின் விவரங்களை ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளதாக அறியமுடிகிறது. இந்நிலையில் இவ்வழக்கின் புகார் மற்றும் தடயப்பொருட்கள் முரண்பட்டுள்ளதும், அசா.1ன் உறவினர்களே சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளதும் அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கச் செய்கிறது.

8. மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27 ன் கீழ் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகள் அரசு தரப்பில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். 1. எதிரி போலீசாரின் பாதுகாப்பில் இருந்திருக்க வேண்டும். அந்த காவல் கைது செய்த பின்பாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. Chandra Prakash Vs State of Rajastan 2014 (4) Supreme 646, 2. வாக்குமூலம் கொடுக்கும் நபர் குற்றம் செய்த நபராக இருக்க வேண்டும். 3. அவர் கொடுக்கும் வாக்குமூலம், ஒப்புதல் வாக்குமூலமாகவோ அல்லது தகவலாக கூட இருக்கலாம். 4. மேற்படி, தகவலின் பேரில் புதிதாக ஒரு சங்கதிகள் தெரியவந்திருக்க வேண்டும் மேற்படி, கூற்றுகளை பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் மேற்கோள் காட்டியுள்ளது. மேற்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே அந்த ஒப்புதல் வாக்குமூலமானது ஏற்றுக்கொள்ளதக்கது என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Sanjay Dutt VS St of Mahastra, through CBI (STR) AIR 2013 SC 2687 என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது.

9. மேலும், இந்திய சாட்சிய சட்ட பிரிவு 114 ஆதாரச் சட்டத்தின் (a) விளக்கத்தின் கீழ், மேற்கண்ட உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை பார்க்கும் போது, திருட்டு சம்பவம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும், குற்றம்சாட்டப்பட்ட

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:25:07 +0000

நபர் வெறும் சந்தேகத்தின் பேரில் பிடிபட்டார், என்ற கருத்தில், எந்த அனுமானமும் இல்லை. வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் நேரில் பார்த்தவர்கள் யாரும் இல்லை என்பது தெளிவாகிறது.

10. இந்நிலையில் அசா.1, 2 சாட்சிகள் அசா.1 ன் வீட்டின் முன் கதவை உடைத்து உள்ளே சென்று வீட்டின் மேல்மாடியில் இருந்த ரூமிற்கு சென்று ரூமில் இருந்த பெட்டகத்தை சாவியை போட்டு திறந்து பெட்டகத்தின் உள்கதவை உடைத்தும் அதிலிருந்த சுமார் ரூ.5,40,000/- மதிப்புள்ள தங்க நகைகளை திருடிச் சென்ற நபர் எதிரிதான் என சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் புகாரானது யாரால் எழுதப்பட்டது, எப்போது கொடுக்கப்பட்டது, தடயப்பொருட்கள் கைப்பற்றப்பட்டது ஆகியவை முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். இந்நிலையில் 1வது எதிரி தான் அசா.1 ன் வீட்டின் உள்ளே நுழைந்து, நகைகளை திருடிச்சென்றுள்ளார் என்பது சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் நிரூபிக்கும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சியம் அளிக்கவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

IX) இறுதியாக சந்தேகத்தின் பலனை 1வது எதிரிக்கு அளித்து 1வது எதிரியை இதச பிரிவுகள்.454, 380 ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து, 1வது எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. (இவ்வழக்கின் 2 வது எதிரி கடந்த 18.03.2026 அன்று சிசி எண்.187/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டு, இதுநாள் வரை நிலுவையில் இருந்து வருகிறது.)

11. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்களுக்கான உத்தரவு இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வழக்கான சிசி எண்.187/2026 வழக்கில்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.06.11 12:25:11 +0000

பகரப்படும்.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 11-ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.06.11 12:25:16 +0000

நீதித்துறை நடுவர் எண்.I,

தஞ்சாவூர்.

**அரசு தரப்பு விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

அ.சா.1 -- திருமதி. பக்ருன்னிசா (புகார்தாரர்)

அ.சா.2 -- திருமதி. ஷேரீன் பாத்திமா (கேள்விப்பட்ட சாட்சி)

அ.சா.3 -- திருமதி. சந்திரா (புலன் விசாரணை அதிகாரி)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 16.05.2017 | புகைப்படம் (எண்ணிக்கை -6) | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 23.04.2017 | புகார் மனு | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | 23.04.2017 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | 23.04.2017 | பார்வை மகசர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | 23.04.2017 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | 16.05.2017 | 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | 16.05.2017 | 2 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.8 | 16.05.2017 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.9 | 16.05.2017 | படிவம் - 91 (சிபி எண்.69/2017) | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்**:

1) சுமார் 18 பவுன் எடையுள்ள கொத்து ஆராம்-1, 2) நெக்ல்ஸ்-1, தோடு ஒரு ஜோடி, மோதிரம்-1, கைசெயின் -1 (சுமார் 15 பவுன்), 3) சுமார் 8 பவுன் எடையுள்ள காப்பு வளையல், 4) சுமார் 2 பவுன் எடையுள்ள மோதிரம்-2, 5) சுமார் 3 பவுன் எடையுள்ள ஜிமிக்கி ஜோடி, 3 பவுன் எடையுள்ள ஜிமிக்கி-1 ஜோடி, 6) சுமார் 5 பவுன் டையுள்ள டாலருடன் கூடிய தங்க செயின்-1, மொத்தம் சுமார் 54 பவுன்.

**1 வது எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**- இல்லை.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.06.11 12:25:23 +0000

நீதித்துறை நடுவர் எண்.I,

தஞ்சாவூர்.

**குறிப்பு:**

1) வழக்கு விசாரணையின் போது எதிரி ஜாமீனில் இருந்தார்.

2) எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.